## மக்காச்சோள விலை நிலையாக இருக்க வாய்ப்பு உள்ளது

மக்காச்சோளம் மாவுச் சத்து மற்றும் கார்போஹட்ரேட் நிறைந்த பயிர் வகையாகும். இவை பல் துறை மற்றும் தொழில் துறை மூலப்பொருளாகவும் உள்ளது. மேலும் துணி, உணவு, மருந்து மற்றும் காகிதத் துறைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. மக்காச்சோளத்தின் உற்பத்தி, மற்ற தானியங்களின் உற்பத்தியை விட அதிகமாக இருப்பதால் இதை “தானியங்களின் அரசி” என அழைக்கின்றனர்.

அமெரிக்க ஐக்கிய வேளாண் துறை (USDA) தகவலின்படி, 2016-17 ஆம் ஆண்டு, இந்தியாவில் மக்காச்சோள உற்பத்தி 9.5 மில்லியன் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 25 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. உத்திரபிரதேசம், இராஜஸ்தான், மத்திய பிரதேசம், பீகார், இமாச்சல பிரதேசம், ஜம்மு காஷ்மீர் மற்றும் பஞ்சாப் ஆகிய வட மாநிலங்களில் மக்காச்சோளம் அதிகளவு பயிரிடப்படுகிறது. இவை மொத்த பரப்பளவில் மூன்றில் இரண்டு பங்கு வகிக்கிறது.

தமிழ்நாட்டில் 2014-2015 ஆம் ஆண்டு, மக்காச்சோளம் 0.33 மில்லியன் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 1.81 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. பெரம்பலூர், திருப்பூர், திண்டுக்கல், தேனி, தூத்துக்குடி மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் ரபீ பருவத்தில் அதிகளவு பயிரிடப்படுகிறது. கள மூலங்களின் படி, மழை மற்றும் வறட்சியால் தமிழ்நாட்டில் மக்காச்சோள உற்பத்தி குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தமிழ்நாட்டின் மக்காச்சோள தேவையை, பிற மாநிலங்களிலிருந்து வரும் வரத்து நிவர்த்தி செய்கிறது. தமிழ்நாட்டிற்கு கர்நாடகா, ஆந்திர பிரதேசம் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்களிருந்து மக்காச்சோளத்தின் வரத்து நவம்பர் 2016 முதல் பிப்ரவரி 2017 வரை இருக்கும்.

அமெரிக்க ஐக்கிய வேளாண் துறை (USDA) தகவலின்படி, 2016-17 ஆம் ஆண்டு இந்தியாவில் மக்காச்சோள இருப்பு மற்றும் நுகர்வுகள் முறையே 0.16 மில்லியன் டன்கள் மற்றும் 23.3 மில்லியன் டன்கள் ஆகும். பாரம்பரியமாக இந்தியாவிலிருந்து மக்காச்சோளமானது மலேசியா, இலங்கை, நேபாளம், ரோமன், எகிப்து மற்றும் பக்ரைன் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

ஆனால் தற்போது வறட்சி மற்றும் உள்நாட்டு தேவை போன்ற காரணங்களால் குறைந்த அளவே மக்காச்சோளம் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இந்தியா 2016-17 ஆம் ஆண்டு உக்ரைனிலிருந்து 1.00 லட்சம் டன்கள் மக்காச்சோளத்தை இறக்குமதி செய்கிறது. மேலும் அர்ஜென்டினா மற்றும் ஐக்கிய நாடுகளிலிருந்தும் இறக்குமதியாகிறது.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்புத் திட்டம், கடந்த 13 ஆண்டுகளாக உடுமலைப்பேட்டை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நிலவிய மக்காச்சோளம் விலை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் டிசம்பர் 2016 வரை தரமான மக்காச்சோளத்தின் பண்ணை விலை குவிண்டாலுக்கு ரூ.1400 – 1500 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி - 0422-2431405

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்
சிறு தானியங்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422-2450507